## August 10, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களின் கலாசார உறவுகளை மேம்படுத்துவதில் ஒரு நகர்வாக, பல தலைமுறைகளுக்கு முன்பு வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து அங்கு வசிக்கும் அவர்களின் குழந்தைகளுக்கான 'வேர்களைத் தேடி' என்ற பண்பாட்டு பயணத் திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்தார். இந்தத் திட்டத்தின் மூலம் வெளிநாடுகளில் வசிக்கும் 18 முதல் 30 வயதுக்குள்பட்ட தமிழர்களின் வாரிசுகளை அரசு செலவில் தமிழ்நாட்டுக்கு வரவழைத்து, அவர்களுக்கு வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு பண்பாட்டு பயணம் ஏற்பாடு செய்யப்பட் டது.
2. ஜப்பானின் நாகசாகி நகரம் மீது அமெரிக்கா நடத்திய அணுகுண்டு தாக்குதலின் 80-ஆவது ஆண்டு நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. 1945 ஆகஸ்ட் 6-இல் ஹிரோஷிமாவில் அமெரிக்கா நடத்திய அணுகுண்டுத் தாக்குதலில் 1.4 லட்சம் பேர் உயிரிழந்தனர். பின்னர் ஆகஸ்ட் 9-ஆம் தேதி நாகசாகியில் நடத்தப்பட்ட அணுகுண்டு வீச்சு தாக்குதலில் மேலும் 70,000 பேர் உயிரிழந்தனர். உலகில் நடத்தப்பட்டகடைசி அணு ஆயுதத் தாக்குதல் இதுவாகும்.
3. இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஆக. 1-ஆம் தேதியுடன் 68,887.1 கோடி டாலராக குறைந்துள்ளது. டாலர் அல்லாத யூரோ, பவுண்டு, யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் மதிப்பு ஏற்ற, இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப் படுவது அந்நிய நாணய சொத்துகளாகும். சர்வதேச நிதியத்தில் (IMF) இந்தியா வின் கையிருப்பு 5.9 கோடி டாலர் குறைந்து 469.4 கோடி டாலராக உள்ளது என்று ரிசர்வ் வங்கியின் புள் ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
4. மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோவின் கிழக்கு பகுதியில் ருவாண்டா ஆதரவு பெற்ற எம்23 கிளர்ச் சியாளர்கள் அண்மை வாரங்களில் 80 பேரை படுகொலை செய்தனர்.
எம்23 உள்ளிட்ட கிளர்ச்சிக் குழுக்களும், காங்கோ ராணு வமும் கத்தாரில் கடந்த மாதம் 19-ஆம் தேதி சண்டை நிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டாலும், இரு தரப்பிலும் மோதல் நீடித்துவருகிறது.
5. நீதி, காவல், சிறைத்துறை பணிகள், சட்ட சேவைகள் வழங்குவதில் நாட்டின் 18 மாநிலங்களில் தென் மாநிலங்கள் சிறப்பிடம் பிடித்துள்ளன. நாட்டில் குறைந்தது
1 கோடி மக்கள் தொகைக் கொண்ட 18 மாநிலங்களில் மத்திய, மாநில அரசுகளின் தரவுகளை வைத்து நடத்தப்பட்ட ஆய்வை இந்திய நீதி அறிக்கை (ஐஜேஆர்) என்று வெளியிடப்பட்டது.

**18 மாநிலங்களின் தரவுகள்** (10 மதிப்பெண்களில்)

| மாநிலங்கள் | காவல் | சிறை | நீதித் துறை | சட்ட உதவி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1.கர்நாடகம் | 6.19 | 6.78 | 6.70 | 7.52 | 6.78 |
| 2.ஆந்திரம் | 6.44 | 5.69 | 6.68 | 6.51 | 6.32 |
| 3.தெலங்கானா | 6.48 | 5.32 | 6.91 | 6.00 | 6.15 |
| 4.கேரளம் | 4.71 | 6.03 | 7.43 | 6.50 | 6.09 |
| 5.தமிழ்நாடு | 4.95 | 7.02 | 6.72 | 4.27 | 5.62 |
| 6.சத்தீஸ்கர் | 6.02 | 4.54 | 5.39 | 6.41 | 5.54 |
| 7.மத்திய பிரதேசம் | 5.04 | 5.37 | 5.25 | 6.09 | 5.42 |
| 8.ஒடிஸா | 5.16 | 5.34 | 4.93 | 6.31 | 5.41 |
| 9.பஞ்சாப் | 5.26 | 3.91 | 5.48 | 7.16 | 5.33 |
| 10.மகாராஷ்டிரம் | 5.61 | 5.71 | 4.94 | 4.81 | 5.12 |
| 11.குஜராத் | 5.13 | 5.26 | 4.65 | 5.82 | 5.07 |
| 12.ஹரியாணா | 4.80 | 3.96 | 4.98 | 6.72 | 5.02 |
| 13.பிகார் | 5.04 | 4.69 | 4.35 | 5.54 | 4.88 |
| 14.ராஜஸ்தான் | 4.66 | 5.27 | 5.89 | 3.75 | 4.83 |
| 15.ஜார்க்கண்ட் | 5.01 | 3.81 | 4.80 | 5.70 | 4.78 |
| 16.உத்தரகண்ட் | 5.50 | 2.58 | 3.97 | 6.69 | 4.41 |
| 17.உத்தர பிரதேசம் | 4.26 | 3.84 | 3.56 | 4.05 | 3.92 |
| 18.மேற்கு வங்கம் | 3.36 | 4.69 | 2.45 | 4.50 | 3.63 |

i. நீதி,காவல், சிறைத் துறை பணிகள், சட்ட சேவைகள் ஆகியவற்றில் மத்திய, மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு, மனித வளம், பணி பளு, கட்டமைப்பு ஆகிய அளவுக்கோள்களின் அடிப்படையில் இந்தத் தரவுகளை கடந்த 2 ஆண்டுக ளாக சேகரிக்கப்பட்டு ஆய்வு நடத்தப் பட்டதாக ஐஜேஆர் ஆய்வு அறிக்கை யின் தலைமை ஆசிரியர் மாஜா தாரா வாலா தெரிவித்தார்.
ii. இந்த ஆய்வு அறிக்கையில் நான்கு துறைகளிலும் 10-க்கு 6.78 மதிப்பெண்கள் பெற்று கர்நாடகம் முதலி டத்தில் உள்ளது.
iii. எனினும், காவல் துறையில் கர்நாடகம் மூன்றாம் இடத்திலும், தெலங்கானா முதலிடத்திலும், தமிழகம் 13-ஆம் இடத்திலும் உள்ளன.
iv. சிறைத் துறையில் தமிழகம் முதலிடம்: சிறைத்துறையில் தமிழகம் முதலிடத்திலும், கர்நாடகம் இரண்டாம் இடத்திலும், கேரளம் மூன்றாம் இடத்திலும் உள்ளன. சிறையில் உள்ள கைதிகள் நெரிசல் ஏற்படாதது, அதிக அளவில் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் அடிப்படையில் சிறந்த இடம் வழங்கப்பட்டுள்ளது.
v. நீதி வழங்கலில் கேரளம் முதலிடத்திலும், தெலங்கானா இரண்டாம் இடத்திலும், தமிழகம் மூன்றாம் இடத்திலும் உள்ளன.
vi. சட்ட சேவைகள் வழங்குவதில் கர்நாடகம் முதலிடத்திலும், பஞ்சாப் இரண்டாம் இடத்திலும், ஹரியாணா மூன்றாம் இடத்திலும் தமிழகம் 16-ஆவது இடத்திலும் உள்ளன.

6. 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை என்பது பாதுகாப்புத் துறையில் நாட்டின் தற்சார்புத் திறன், உள்நாட்டுத் தொழில்நுட்ப வலிமை மற்றும் ராஜீய தொலைநோக்குப் பார்வைக்கான பிரகடனம்' என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) தலைவர் சமீர் காமத் தெரிவித்தார். உணர்வுக் கருவிகள் (சென்சார்), ஆளில்லா விமானங்கள், பாதுகாப்பான தகவல்தொடர்பு, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முடிவுகள் எடுக்கும் நடைமுறை, துல்லியத் தாக்குதலுக்கு உதவும் ஆயுதங்கள் உள்ளிட்ட முழுவதும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களும் தொழில்நுட்பங்களும் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையில் மிக முக்கியப் பங்காற்றின.
7. தேர்தல் ஆணையத்தால் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத 334 அரசியல் கட்சிகள் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
   i. நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களிலிருந்து தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த அங்கீகரிக்கப்படாத 334 அரசியல் கட்சிகள், கடந்த
   6 ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஒரு தேர்தலில் போட்டியிட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை பூர்த்தி செய்யவில்லை.
   ii. அதோடு, இந்தக் கட்சிகளுக்கு நாட்டின் எந்தப் பகுதியிலும் கட்சி அலுவலகங்களும் இல்லை என்பதும் தெரியவந்தது. அதனடிப்படையில், இந்த 334 அரசியல் கட்சிகளும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.
   iii. இந்த நடவடிக்கை காரணமாக, தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்திருந்த, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 2,854-இல் இருந்து

2,520-ஆக குறைந்துள்ளது.

8. இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் மீதான அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் வரி விதிப்பால் உலக அளவில் நிலவும் வர்த்தக நிச்சயமற்ற சூழலில் இருந்து உள்நாட்டுத் தொழில் துறையினரைப் பாதுகாக்க ரூ.2,250 கோடி மதிப்பீட்டில் ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்தை மத்திய அரசு விரைவில் தொடங்கவுள்ளது.

9. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**
   i. சமீர் காமத் - பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) தலைவர்
   ii. அஜித் தோவல் - தேசிய பாதுகாப்பு ஆலோசகர்
   iii. டெனிஸ் மந்துரோவ் - ரஷ்யா துணைப் பிரதமர்